**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8213013

1. District : Vellore
மாவட்டம்
PS: Vigilance & Anti Corruption
காவல்நிலையம்
Year: 2024
ஆண்டு
FIR No. 01/2024
மு.த.அ. எண்
Date: 10.01.2024
நாள்

2. (i) Act சட்டம்: The prevention of corruption (Amendment) Act 2018
Sections பிரிவுகள்: 7 of PC (Amendment) Act 2018.
(ii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from : 09.01.2024
நாள் முதல்
Date to : 10.01.2024
நாள் வரை
Time Period :
நேர அளவு
Time from :
நேரம் முதல்
Time to :
நேரம் வரை
(b) Information Received at PS. Date :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.01.2024 & @ 05.30 Hrs
Time
நேரம் 10.01.2024 @ 13.00 Hrs
(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-I 2024
Time
நேரம் 10.01.2024 @ 07.15 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் O/o the RTO check post, Katpadi @ christianpet, Vellore Dt. about 15 Kms North and vehicle Hyundai Creta TN 25 BS 7979
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address :
முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District :
மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : V. Saravanamuthu
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : Venkatachalam
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth :
நாள் / பிறந்த ஆண்டு 18.11.1970
(d) Nationality : Indian
நாட்டினம்
(e) Passport No. : —
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : —
வழங்கப்பட்ட நாள்
Place of Issue : —
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Deputy Inspection cell officer
தொழில்
(g) Address : Inspection cell office, Collectorate Sathuvachari, Vellore - 9.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tmt. A. Vasanthi Age 50/2024 W/o R. Surendhar. Motor vehicle Inspector (Non Technical), RTO check post Katpadi @ Christianpet, Vellore District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.......—.......on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......—....... பதவி .......—....... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......—....... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 10-01-2024    [signature] 10/01/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

10.01.2024 @ 13.45 Hrs

Name: பெயர் S. VIJAY.
Rank: நிலை ..................... No. எண் ..........
INSPECTOR OF POLICE,
VIGILANCE AND ANTI-CORRUPTION,
VELLORE

**Submitted:**

**Column (12) in Vellore Vigilance and Anti Corruption Crime No.01/2024 u/s 7 of Prevention of Corruption (Amendment) Act 2018.**

| எதிரி | இன்று 10.01.2024 பகல் 13.00 மணிக்கு வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் முகாமில் இருந்தபோது துணைக்காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் வேலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு. V.சரவணமுத்து அவர்கள் நேரில் ஆஜராகி கொடுத்த புகாரினை காவல் துணைக்காவல் கண்காணிப்பாளர் அவர்கள் பெற்று என்னிடம் வழக்கு பதிவு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள கொடுத்த உத்தரவின் பேரில் மேற்படி புகாரினை பெற்று பார்க்க அதன் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் V. சரவணமுத்து, துணை ஆய்வுக்குழு அலுவலர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அய்யா, நான் |
|---|---|
| A. வசந்தி,<br>மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.நு.அ), போக்குவரத்து துறை சோதனை சாவடி<br>காட்பாடி @ கிருஷ்டியான்பேட்டை,<br>வேலூர் மாவட்டம்.<br><br>இருப்பிட முகவரி:<br><br>எண்.65, 2வது குறுக்கு தெரு,<br>பாரதி நகர் விரிவு,<br>இராணிப்பேட்டை,<br>இராணிப்பேட்டை மாவட்டம். | |

வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக உள்ளேன். 10.01.2024 தேதியன்று காலை சுமார் 05.15 மணியளவில் வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுக்கா, காட்பாடி கிருஷ்டியான்பேட்டையில் உள்ள போக்குவரத்து துறை சோதனை சாவடியில் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.வசந்தி என்பவர் போக்குவரத்து துறை சோதனை சாவடியில் 09.01.2024 காலை 08.00 மணி முதல் 10.01.2024 காலை 08.00 மணி வரை பணியில் உள்ளதாகவும் அவர் பணியில் உள்ள போது மேற்படி சோதனை சாவடியை கடந்து செல்லும் கனரக வாகனங்கள், பிற மாநில வாடகை வாகனங்கள் மற்றும் இதர வாகனங்களில் வாகன உரிமையாளர்கள் மற்றும் வாகன ஓட்டிகளிடம் நேரிடையாகவும் மற்றும்

இடைத்தரகர்கள் மூலம் பெருமளவு தொகையினை கட்டாயப்படுத்தி பணத்தை லஞ்சமாக வசூல் செய்வதாகவும், மேலும், அவ்வாறு வழங்க மறுப்பவர்களின் வாகனங்களை தற்காலிகமாக நிறுத்தி வைத்தும் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு இடையூறு மற்றும் அலைகழிப்பு ஏற்படுத்துவதாகவும், மேலும் தமிழ்நாடு மோட்டார் வாகன சட்டம் மற்றும் விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்காமல் பெருமளவு தொகையினை லஞ்சமாக பெறுவதாகவும், திருமதி.வசந்தி மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பம் அல்லாத) பணியில் இருந்த 09.01.2024 காலை 08.00 மணி முதல் 10.01.2024 காலை 08.00 மணி வரை வசூல் செய்யப்பட்ட லஞ்ச பணத்தை அலுவலகத்திற்கு வெளியே பல இடங்களில் வைத்திருந்ததை இடைதரகர் முலமாக அவர் பணிமுடித்து புறப்பட்டு செல்லும் போது Hyundai Creta Car TN 25 BS 7979 என்ற காரில் எடுத்து செல்வதாக எனக்கு கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் என்னுடைய நம்பகமான தகவலாளர்கள் மூலம் மீண்டும் ஊர்ஜிதம் செய்து கொண்டு, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளருக்கு 10.01.2024 விடியற்காலை சுமார் 05.30 மணியளவில் தெரியப்படுத்தினேன். பின்னர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு சென்று நானும் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர், வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக குழுவினர் மற்றும் வேலூர் ஆயுதப்படை பெண் காவலர் 3199, திருமதி.P.மஞ்சு, ஆகியோருடன் அலுவலகத்தில் இருந்து காலை சுமார் 07.15 மணிக்கு புறப்பட்டு காட்பாடி உள்ள போக்குவரத்து சோதனை சாவடியிடம் இருதுறை திடீர் சோதனை மேற்கொள்ள காலை 07.45 மணிக்கு வந்து சேர்ந்து மேற்படி அலுவலகத்தை கண்காணித்து கொண்டு இருந்தபோது காலை சுமார் 08.00 மணிக்கு TN 25 BS 7979 என்ற பதிவு எண் கொண்ட Hyundai Creta White colour Car தகவலர் கூறியது போல் சோதனை சாவடி முன்பாக வந்து நின்றது. காலை சுமார் 08.35 மணிக்கு மேற்படி காரில் திருமதி.வசந்தி, மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பம் அல்லாத) ஓட்டுனர் இருக்கைக்கு பின் உள்ள இருக்கையில் ஏறி அமர்ந்தவுடன் மேற்படி கார் ஆந்திர மாநிலம் சித்தூர் நோக்கி சென்றது, தகவலின்படி அந்த வாகனத்தில் வசூல் செய்யப்பட்ட லஞ்சப்பணம் கொண்டு செல்வதாக தெரியவந்ததால், உடனே குழுவினர்கள் அனைவரும் அந்த காரினை பின் தொடர்ந்து அரசு வாகனத்தில் சென்றோம். மேற்படி வாகனம் விரைவாக சென்றதாலும், இடைநிறுத்தம் செய்தால் வாகன விபத்து ஏற்படக்கூடும் என்பதால் அதனை தவிர்க்கவும், பாதுகாப்பு கருதியும் குழுவினர் அனைவரும் வாகனத்தை பின் தொடர்ந்து சென்றோம். மேற்படி கார் சித்தூர் நோக்கி செல்லும் சாலையில் சென்று, பொம்மசமுத்திரம், முத்தரசிகுப்பம், சேர்காடு சோதனை சாவடி, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், EB கூட்டு ரோடு, திருவலம், BHEL Road, லாலாபேட்டை ரோடு, ராணிப்பேட்டை ஆட்சியர் அலுவலகம் வழியே சென்று ஆட்சியர் அலுவலகம் எதிரே செல்லும் சாலையில் பாரதி நகர் விரிவு என்ற பகுதிக்கு சென்று பாரதி நகர் 2-வது குறுக்கு சாலைக்கு சென்று Hyundai Creta Car TN 25 BS 7979 என்ற பதிவு எண் கொண்ட கார் காலை சுமார் 09.10 மணிக்கு இடதுபக்கமாக ஒரு வீட்டின் முன் நின்றது. உடனே நானும், துணை காவல்

கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினர் அனைவரும் எங்கள் வாகனங்களை நிறுத்தி அதில் இருந்து இறங்கி TN 25 BS 7979 மேற்படி காரின் பின் இருக்கையில் அமர்ந்திருந்த பெண்ணின் பெயர் கேட்க அவர் தன்னுடைய பெயர் வசந்தி என்று கூறினார் அதே நேரத்தில் மேற்படி காரின் ஓட்டுனர் இருக்கையில் இருந்த நபரின் பெயர் கேட்க அவர் தன்னுடைய பெயர் நாகப்பன் என்று கூறினார். மேற்படி வசந்தி மற்றும் நாகப்பன் ஆகியோரிடம் நானும் காவல் துணை கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் மற்றும் இரு துறை திடீர் சோதனைக்குழுவினர் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு, எங்களிடம் எந்த பணமோ, பொருளோ இல்லை என்று சுயபரிசோதனை செய்து காண்பிக்கப்பட்டது. பின்னர் திருமதி.A.வசந்தி அவர்களிடம் விசாரிக்க அவர் தான் வேலூர் மாவட்டம் காட்பாடி கிருஷ்டியான்பேட்டை போக்குவரத்துறை சோதனை சாவடியில் மோட்டார் வாகன ஆய்வாளராக கடந்த 17.03.2022 முதல் பணி செய்து வருவதாகவும், மேலும் அவரிடம் கார் நின்றுள்ள இடம் குறித்தும் இந்த இடத்தில் ஏன் காரினை நிறுத்தினீர்கள் என்று கேட்க அதற்கு அவர் காரின் இடதுபக்கம் இருந்த இரும்பு கதவுகள் கொண்ட அடுக்குமாடி வீட்டினை காட்டி இது தான் தன்னுடைய வீடு என்று கூறினார். அதன் பின்னர் மேற்படி காரின் ஓட்டுனர் இருக்கைக்கு பின் இருக்கையில் திருமதி.வசந்தி அமர்ந்திருந்த இருக்கையின் பக்கத்தில் இருந்த அவருடைய Ladies Hand Bag சோதனை செய்ய அதில் பணம் ரூ.150/- இருந்தது கை செலவிற்காக வைத்துள்ள பணம் என்று கூறியதால் அப்பணம் வசந்தியிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அதே Hand Bag-ல் திருமதி.A.வசந்தி அவர்களின் அடையாள அட்டை இரண்டு இருந்தது இரண்டு அடையாள அட்டைகளும் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. காரில் திருமதி.வசந்தி அமர்ந்திருந்த இருக்கையின் கால் வைக்கும் பகுதியில் அவரது கால் அருகில் ஒரு சிறிய வெள்ளை நிற பிளாஸ்டிக் போன்ற பையில் மூன்று வெளீர் காக்கி நிற ஆபீஸ் கவரில் கத்தை கத்தையாக பணம் போன்று இருந்தது அது குறித்து திருமதி.வசந்தி அவர்களிடம் கேட்க அவர் அதில் பணம் தான் உள்ளது என்று கூறினார் எவ்வளவு உள்ளது என்று கேட்டதற்கு சுமார் 2,50,000/-ம் இருக்கும் என்று தெரிவித்தார். அந்த பணம் குறித்து விளக்கம் கேட்க அவர் சில நிமிடங்கள் அமைதியாக இருந்துவிட்டு தான் பணியில் இருந்த 09.01.2024 முதல் செக்போஸ்டில் வசூல் ஆன தொகைதான் என்றும் மேற்படி தொகையை அரசுக்கு செலுத்த வேண்டும் என்று கூறினார். நீங்கள் பணி முடித்து வேறு ஒருவரிடம் பொறுப்பினை ஒப்படைத்துவிட்டுதானே வருவீர்கள் அப்படி இருக்கையில் நீங்கள் பணத்தை எப்படி கொண்டுவரமுடியும் என்று கேட்க அதற்கு அவர் அமைதியாக இருந்தார் பின் சார் அதெல்லாம் ஒரு adjustment என்று கூறினார். இரு துறை திடீர்சோதனை குறித்த செயல்முறையை தொடர்ந்து அவ்விடத்திலேயே சாலையில் வைத்து தொடரமுடியாத காரணத்தாலும் பெண் காவலரை கொண்டு திருமதி.வசந்தி மற்றும் காரின் ஓட்டுனர் திரு.நாகப்பன் அவர்களை திரேக சோதனை செய்ய பொதுவான அந்த சாலை ஏதுவாக இல்லாத காரணத்தாலும் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படும் என்பதாலும், திருமதி.வசந்தி அவர்கள் வசிக்கும் இடம் என்பதால் அவருக்கு சங்கடம் ஏற்படக்கூடாது என்பதாலும் திருமதி.வசந்தி மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) அவர்களிடம் மேற்படி அவரது வீட்டின் வராண்டாவில் வைத்து

சிறிய பிளாஸ்டிக் போன்ற பையில் இருந்த பணத்தை எண்ணிப்பார்க்கவும் தொடர் விசாரணை செய்யவும் அனுமதி கேட்க அவரும் வீட்டில் வைத்து மேற்படி சோதனையை தொடரலாம் என்று ஒப்புதல் தெரிவித்தார் அதன் பின் காலை சுமார் 09.30 மணி முதல் வீட்டின் இரும்பு கேட்டினை திறந்து வீட்டின் தரை தளத்தில் இருந்த வராண்டாவிற்கு சென்றபோது மேற்படி வீட்டீன் தரை தளத்தில் இருந்த வீட்டில் இருந்து ஒரு ஆண் நபர் வெளியே வந்து யார் இவர்கள் என்று திருமதி.வசந்தி அவர்களிடம் கேட்டார் அதற்கு சோதனை குழுவினர் ஆகிய நாங்கள் எங்களை அறிமுகம் செய்து கொண்டு சோதனைக்கு வந்திருப்பதன் நோக்கம் குறித்து தெரிவித்தபோது அவர் வெளியே வராண்டாவில் வேண்டாம் வீட்டுக்குள் வாருங்கள் என்று கூறினார் அப்போது திருமதி.வசந்தி அவர்கள் மேற்படி ஆண் நபர் தன்னுடைய கணவர் சுரேந்தர் என்றும் அவர் காவேரிப்பாக்கம் LIC அலுவலகத்தில் மேலாளராக பணி செய்வதாக கூறினார். சோதனை குழுவினர் ஆகிய நாங்கள் மேற்படி வீட்டின் தரை தளத்தின் வராண்டாவில் வைத்து அப்பணத்தை எண்ணிப்பார்க்க அதில் பணம் ரூ.3,00,000/-ம் (ரூ.500x596=2,98,000/-, ரூ.100 x18=1,800/-, ரூ.50 x2=100/- ரூ.20 x2=40/-, ரூ.10 x6=60/-) இருந்தது. மேற்படி பணம் குறித்து விசாரிக்க, அவர் பதில் ஏதும் சொல்லாமல் மௌனமாகவே இருந்தார். சிறிது நேரம் கழித்து அந்த பணம் அரசு கணக்கில் செலுத்த வேண்டிய தொகை என்று கூறினார் எதற்காக அரசு கணக்கில் கட்டவேண்டும் அதற்கான விவரம் பற்றி கேட்க மீண்டும் சிறிது நேரம் அமைதியாக இருந்துவிட்டு சார் இந்த பணம் செக்போஸ்டில் வசூல் ஆன தொகை மீண்டும் மீண்டும் எனக்கு மட்டும் தான் இப்படி நடக்கிறது என்னை காப்பாற்றுங்கள் என்று கூறினார். தக்க முகாந்திரம் மற்றும் விளக்கம் கூற இயலாத அப்பணம் ரூ.3,00,000/-ம், பணம் இருந்த சிறிய வெள்ளை நிற பிளாஸ்டிக் போன்ற பை மற்றும் மூன்று வெளிர் காக்கி நிற ஆபீஸ் கவர்களும் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. காரின் ஓட்டுனர் திரு.நாகப்பன் அவர்களை விசாரித்து அவர் சொன்ன விவரங்கள் இருதுறை திடீர் கூட்டு சோதனையில் பதிவு செய்யப்பட்டது. வாகனம் TN 25 BS 7979 என்ற பதிவு எண் கொண்டு Hyundai Creta Car-ன் உரிமையாளர் குறித்து திருமதி.வசந்தி அவர்களிடம் கேட்க அவர் அந்த கார் திருவண்ணாமலை மாவட்டம் பென்னாத்தூர் அருகே உள்ள மேக்கலூர் கிராமத்தில் வசிக்கும் தன்னுடைய அக்கா திருமதி.சகுந்தலா அவர்களின் மகன் திரு.பிரேம்குமார் என்பவருடையது என்றும் தனக்கு தேவைப்படும்போது அந்த வாகனத்தை பயன்படுத்துவதாகவும் அதிகப்படியாக தன்னிடம் தான் அந்த வாகனம் உபயோகத்தில் உள்ளது என்றும் கூறினார். மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டு சோதனை சம்மந்தமான விரிவான செயல்முறை 10.01.2024 காலை 09.10 மணி முதல் தயார் செய்யப்பட்டு 12.30 மணிக்கு முடிக்கப்பட்டு அதன் நகல் திருமதி.வசந்தி அவர்களுக்கு வழங்கி ஒப்புதல் பெறப்பட்டது. திருமதி.வசந்தி மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பம் அல்லாத) லஞ்சமாக பணத்தை வசூல் செய்து வைத்திருந்தவர் மீது ஊழல் தடுப்பு சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட லஞ்ச பணம் ரூ.3,00,000/-, வெள்ளை நிற பிளாஸ்டிக் கவர், இரண்டு அடையாள அட்டை, வெளிர் காக்கி நிற அலுவலக

கவர்-3 மற்றும் இருதுறை திடீர் கூட்டு சோதனையின் போது தயார் செய்யப்பட்ட 10.01.2024 நாளிட்ட அசல் செயல்முறை ஆகியவற்றையும் தங்களிடம் உரிய நடவடிக்கைக்காக ஒப்புவிக்கிறேன். sd/- xxxxxx, 10.01.24 V.சரவணமுத்து, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்

Inspr Tr.S.Vijay, please receive the complaint and register a case as per law and take up for investigation. sd/- xxxxxxx 10/1/2024 DSP/V&AC/VL

Sir,

Received the complaint on 10/01/2024 at 13.00 hrs. and registered a case in Vellore V&AC Cr.No.01/2024, u/s 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018 on 10/01/2024 @ 13.30 Hrs. Sd/-xxxxx 10/01/2024 (S.VIJAY), INS/VAC/VL

The original First Information Report along with complaint of Tr.V.Saravanamuthu, Deputy Inspection Cell Officer dated 10.01.2024 and Original Joint Surprise Check Proceedings dated 10.01.2024 is submitted to the Hon'ble Special Judge/Chief Judicial Magistrate, Vellore and copy of the First Information Report is sent to the officers concerned.

10/01/2024
(S.VIJAY)